©
GOVERNMENT OF TAMIL NADU
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 43A] சென்னை, வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 19, 2016
மாசி 7, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு-2047

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2016–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2016.**

**2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/2012.

41–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 41ஆம் பிரிவில்,–

(1) 2–ஆம் பிரிவிற்குரிய வரம்புரைக்குப் பதிலாக பின்வரும் வரம்புரை அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**வரம்புரை:** ஆனால் கல்வி அலுவற்பணிகள் தவிர பிற பொருட்பாடுகளுக்குத் தொடர்பான நிலையமைவிதி எதனின் அல்லது நிலையமைவிதி ஒன்றின் திருத்தம் அல்லது நீக்கறவு எதனின் வரைவினையும் கொண்டு வரக்கூடாது.

(2) (4)–ஆம் உட்பிரிவிற்குப் பின்பு பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும் அதாவது:–

“(5) குழுமத்தால் நிறைவேற்றப்பட்ட நிலையமைவிதி ஒன்று வேந்தரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதற்கு வேந்தர் ஒப்புதல் வழங்கலாம் அல்லது அவருடைய ஒப்புதலை வழங்காமல் நிறுத்தி வைக்கலாம். குழுமத்தால் நிறைவேற்றப்பட்ட நிலையமைவிதி ஒன்று வேந்தரால் ஒப்புதல் வழங்கப்படும் வரை, அது செல்லுந்தன்மையுடையதாக இருக்காது”.

**நோக்க—காரண விளக்கவுரை**

2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2012) 41—ஆம் பிரிவின் (2)—ஆம் உட்பிரிவானது, கல்விக் குழுவின் அதிகாரங்களும் கடமைகளும் பல்கலைக்கழகத்தின் கல்வி அலுவற்பணிகள் தொடர்பானதாக இருக்கையில் நிலையமைவிதி எதற்கும் அல்லது நிலையமைவிதிக்குத் திருத்தம் எதனையும் கொண்டுவருவதற்கு கல்விக்குழுவை இயல்விக்கிறது. பல்கலைக்கழகத்தின் கல்வி அலுவற்பணிகளுக்குத் தொடர்புடைய பொருட்பாடுகளுக்கு மட்டுமே நிலையமைவிதிக்குத் திருத்தம் கொண்டுவருவதற்கு கல்விக் குழுவினைக் கட்டுப்படுத்தும் வகையில் மேற்சொன்ன சட்டத்தின் 41—ஆம் பிரிவின் (2)—ஆம் உட்பிரிவில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. மேலும், பல்கலைக்கழகத்தின் மேலாண்மை குழுமத்தினால் செய்யப்படும் நிலையமைவிதிகளை வேந்தருக்கு அவருடைய ஏற்பிசைவிற்காக சமர்ப்பிக்கப்படுவதற்காக வகையம் ஒன்றையும் உள்ளடக்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அரசு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 21/2012—ஐ கருதப்படும் நோக்கத்திற்காக பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

**2.** இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.ஏ. ஜெயபால்,**
*மீன்வளத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.